செ.வெ.எண்.223/2009(செமதொஅ) நாள் : 29.07.2009.

**காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நோக்கியா நிறுவனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 214 பேருக்கு பணி நியமன ஆணைகளை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு. ஆ.சு.ஜீவரத்தினம்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நோக்கியா நிறுவனத்தில் பணி நியமனம் பெற்றவர்களுக்கு நியமன ஆணை வழங்கும் விழா இன்று(29.07.2009) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு.ஆ.சு.ஜீவரத்தினம்,இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு 214 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி தலைமையுரையாற்றியதாவது,

“ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் இத்துறையின் மூலம் நிறைய வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வழங்குவதில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளார். இதனால் காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர்,சென்னை, திருவள்ளூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 3 ஆயிரம் பேருக்கு நோக்கியா நிறுவனத்தில் பணி நியமனம் பெற்றுள்ளனர். தனியார் நிறுவனங்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணியாளர்களை தேர்வு செய்கின்றனர். அதற்கு காரணம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம்தான் தகுதியான, திறமையுள்ளவர்கள் கிடைக்கின்றார்கள். கடந்த ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை தனியார் துறையில் 6,622 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருமே மேல்படிப்பை தொடர இயலாத, ஏழ்மை நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்தவர்கள்.

இன்றைய தினம் நோக்கியா நிறுவனத்தில் பணியில் சேரும் உங்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. நீங்கள் செய்யும் தொழிலை தெய்வமாக மதிக்க வேண்டும். காஞ்சிபுரம், பல்லவபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக தனியார் நிறுவங்கள் பல்வேறு வேலைவாய்ப்பு முகாம்களை ஏற்பாடு செய்து பணியாளர்களை தேர்வு செய்து வருகின்றனர்.

கடந்த 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரை பணி நியமன தடை சட்டம் அமலில் இருந்தால் அரசு பணிகளுக்கு பணி நியமனங்கள் செய்ய இயலவில்லை. 2006ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பணி நியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டு இதுவரை 3,40,078 பேருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளன. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.198 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3.50 இலட்சம் படித்த இளைஞர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, தங்களது பதிவினை புதுப்பிக்கத் தவறிவர்களுக்காக அரசு சிறப்பு புதுப்பித்தலுக்கான சலுகையினை வழங்கியதன் மூலம் 4,17,641 நபர்கள் தங்களது பதிவினை புதுப்பித்துள்ளனர். மேலும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை தங்களது பதிவை புதுப்பிக்க தவறியவர்களுக்காக அரசு சிறப்பு சலுகையினை வழங்கியுள்ளது. தொழில் சார்ந்த படிப்புக்களுக்கான வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னையில் உள்ளது போல் மதுரையிலும் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதனால் தமிழகத்தின் தென் பகுதியை சேர்ந்த 15 மாவட்ட மக்கள் பயன்பெறுகின்றார்கள். மேலும் தொழில் சார்ந்த படிப்பு படித்தவர்கள் தங்களது பதிவினை சென்னையிலோ அல்லது மதுரையிலோ பதிவு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. தங்கள் மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலங்களில் வழங்கினால் தொழில் சார்ந்த படிப்புக்கான வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வழங்கப்படும்.

இந்திய இளைஞர்களின் உண்மை, திறமை மற்றும் நேரம் தவறாமைக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்பு உள்ளது. அவர்களிம் கல்வியை தவிர திறன் பயிற்சிகள் மிக குறைவாக உள்ளன. இளைஞர்கள் திறன் பயிற்சியை வளர்க்க தமிழக அரசு ரூ. 43 இலட்சம் செலவில் 27 தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆங்கில பேச்சுப் பயிற்சியை வழங்கி வருகிறது. மேலும் குறுகிய கால திறன் பயிற்சிக்காக(Modular Employment Skill) அரசு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 60 தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் 50 ஆயிரம் பேருக்கு தொழில் சார்ந்த திறன் பயிற்சி இலவசமாக வழங்கி வருகிறது. இதுவரை 48,135 பேர் திறன் பயிற்சி பெற்றுள்ளார்கள். இன்று பணி நியமனம் பெறும் இளைஞர்கள் சிறப்பாக செயல்பட்டு, வாழ்வில் வளம் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மண்டல வேலைவாய்ப்புத்துறை துணை இயக்குநர் திருமதி. அனுசுயா செல்வி, நோக்கியா நிறுவனத்தின் மனித வள மேலாளர் திரு.மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக விழாவிற்கு வருகைத் தந்தவர்களை காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு உதவி இயக்குநர் திரு.முருகேசன் வரவேற்றார். நிறைவாக சாந்தோம் வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் திரு.விஜயகுமார் நன்றி கூறினார். காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. ஜெயபால், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. செந்தில் மற்றும் நோக்கியா நிறுவனத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.